கந்தகத் திணை

# குழந்தைப் பாக்கள்

மின் – நூல்

04




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.tamilacademy.com www.kids.noolagam.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

(பன்னாட்டுக் குழந்தைகளுக்கு இணையம் வழித் தமிழ் கற்பிக்கும் நிறுவனம்)

**சிவகாசி - 626 189**

மற்றும்

# அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**சிவகாசி - 626 124**

## இணைந்து உருவாக்கும்

## மின்-நூல் (E-book)

# கந்தகத் திணை

## (புதியதோர் உலகம் செய்வோம்)

(2015 - 2016)

# குழந்தைப் பாக்கள் - 4

**தமிழ்த்துறை மாணவர் குழாம்**

# கார்காலக்கோலம்

*கார்காலம் கவின்மிகு காலம் – உலக உயிர்கள் உயிர்ப் பெற மழைபொழியும் காலம் – மண்மணக்கும் மாரிக்காலம் – இயற்கை புதுப்பொலிவோடு புத்தாடை பூணும் காலம் – முற்றமெல்லாம் முத்துமுத்தாய் மழைப்பெண் கோலமிடும் காலம் – கந்தக மண்ணும் மருதம் போல் முறுவலித்து நிற்கும் காலம் – மழையில் குளிர்ந்து நிற்கும் கந்தக நிலம்போலப் படைப்பு மழையில் செழித்துக் கிடக்கின்றது கந்தகத் திணை.*

*மழையை வா! வா! என அழைக்கும் ஒரு பாடல். மழைப்பொழிவினை விவரிக்கும் ஒரு பாடல் – மழைப்பொழிவின் நிறைவில் ஒளிரும் வானவில்லை வருணிக்கும் ஒரு பாடல் – தலைமுறைகளோடு வாழச்சொல்லும் வாழைக்கென ஒரு பாடல் – வீட்டின் முன் இயற்கைக் குளிரூட்டியாய் நிற்கும் வேம்பிற்கென ஒரு பாடல் – மழை போல் மழலைகளுக்கு மகிழ்வூட்டும் புகை வண்டிக்கென ஒரு பாடல் எனக் கந்தகத்திணையின் கவிதை வானம் கார்காலம் போல் எழிற்கோலம் பூண்டுள்ளது.*

*சில படைப்புகள் கொட்டும் மழை போல் மலர்ந்துள்ளன. சில படைப்புகள் சாரலாய் மணம் வீசுகின்றன. சில படைப்புகள் மழைத்துளி போல் காட்சியளிக்கின்றன. மாரிக்கால கந்தகத் திணை மணமாய் மலர்ந்துள்ளது. அறிவு மணம் பரவக் கூடியுண்போம்.*

*மாணவர்களை ஊக்கப்படுத்தும் கல்லூரி மேனாள் தாளாளர் மதிப்புமிகு* **வை. அய்யன் கோடீஸ்வரன்** *அவர்களுக்கும், மாணவர் முன்னேற்றத்திற்கு ஊக்கப்படுத்திடும் கல்லூரி தாளாளர் மேன்மைமிகு* **கி. அபிரூபன்** *அவர்களுக்கும் கந்தகத்திணையின் இதயம் கனிந்த நன்றி.*

*புதுமைப் படைப்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதி வழங்கிய கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர்* **வ. பாண்டியராஜன்** *அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர்* **செ. அசோக்** *அவர்களுக்கும் களிப்பு நிறை நன்றி!. துறையின் ஆக்கப்பணி கண்டு ஊக்கம் விதைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்* **க. சிவனேசன்** *அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றியினை மொழிகின்றது.*

*மாணவக் குழந்தைக் கவிஞரை மீட்டெடுத்த பெருமிதத்தில் அமெரிக்காவில் தமிழ் இதயத்தோடு வாழ்ந்து வரும்* **உலகத்தமிழ்க் கல்விக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலர் திரு. இரா. வெங்கடேஷ்,** B.E., (PLM Leader in FORD, America) *அவர்களுக்குக் கந்தகத் திணை நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றது. தன் வரைகலையால் (* Graphic *) பாடல்களுக்கு படம்வழி உயிரூட்டிய மாணவர் ம. பழனிக்குமார்* (III MCA) *அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றி. பாப்பா பாக்கள் மழலைகளின் நாவில் மலரட்டும்! தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் பன்னாட்டு உறவை இணைக்கட்டும்!*

முனைவர் **ந. அருள்மொழி,**
ஒருங்கிணைப்பாளர், கந்தகத்திணை

# பொருளடக்கம்



| வ. எண். | படைப்பு | படைப்பாளர்பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 01 | மரம் வளர்ப்போம் | த. ஆனந்தஜோதி | 01 |
| 02 | மழை | சு. சண்முகப்பிரியா | 02 |
| 03 | மழையே வா வா! | சு. மகேஷ்பாண்டி | 03 |
| 04 | வாழைமரம் | த. ஆனந்தஜோதி | 04 |
| 05 | வானவில் | த. விஜயலட்சுமி | 05 |
| 06 | வேப்பமரம் | ப. கணேஷ்வரி | 06 |
| 07 | புகைவண்டி | ப. சுதா | 07 |

# மரம் வளர்ப்போம்

அம்மா இங்கே வாருங்கள்
அரச மரம் வளர்க்கலாம்...

அப்பா இங்கே வாருங்கள்
ஆலமரம் வளர்க்கலாம்...




அண்ணா இங்கே வாருங்கள்
அத்தி மரம் வளர்க்கலாம்...


அக்கா இங்கே வாருங்கள்
அசோக மரம் வளர்க்கலாம்...




தம்பி இங்கே வாருங்கள்
தென்னை மரம் வளர்க்கலாம்...

தங்கை இங்கே வாருங்கள்
புங்கை மரம் வளர்க்கலாம்...

மாமா இங்கே வாருங்கள்
மஞ்சணத்தி வளர்க்கலாம்...




அத்தை இங்கே வாருங்கள்
அருநெல்லி வளர்க்கலாம்...

தாத்தா இங்கே வாருங்கள்
தேக்கு மரம் வளர்க்கலாம்...

பாட்டி இங்கே வாருங்கள்
பனை மரம் வளர்க்கலாம்...

குழந்தைகளே! வாருங்கள்
குழுவாய்ச் சேர்ந்து வளர்க்கலாம்...

த.ஆனந்தஜோதி,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.

# மழை





பொழியுதம்மா பொழியுது
பெய்யாத மழை பொழியுது...
கோடை மழை பொழியுது
கோலம் நனையப் பொழியுது...
வளைந்து ஓடும் பாம்பு போல்
மின்னல் மின்னிப் பொழியுது...
போர்க் கருவி முழக்கம் போல்
இடியும் தந்து பொழியுது...
தேரோடும் வீதி போல
தென்றல் கலந்து பொழியுது...
ஊரே துள்ளிக் குதிக்குது
உற்சாகமாய் இருக்குது...
மழை தந்த மரங்களும்
மகிழ்ச்சியோட சிரிக்குது...



சு. சண்முகப்பிரியா,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.

# மழையே வா வா...!!!

மழையே மழையே வா! வா!
மின்னல் இடியோடு வா! வா!

மேகமே நீ வா! வா!
கடல் நீரை முகந்து வா!
குளிர் காற்றே வா! வா!
கோடை தகர்க்க வா! வா!



மழையே நீயும் வா! வா!
சின்ன மழையே வா! வா!
என்னோடு விளையாட வா!
மண்ணோடு உறவாட வா!


மழையே நீயும் வா! வா!
பெருமழையே வா! வா!
என்னோடு விளையாட வா!
மண்ணோடு உறவாட வா!

மழையே நீயும் வா! வா!
மழைக்கஞ்சி எடுத்தோம் வா! வா!
கழுதைக்குக் கல்யாணம் முடிச்சோம் வா! வா!
கழனி செழிக்க வா! வா!

மழையே நீயும் வா! வா!
பூவிற்குள் தேனாய்த் துளிர்க்க வா!
என்னோடு விளையாட வா!!!

சு. மகேஷ் பாண்டி,
ஆய்வியல் நிறைஞர், தமிழ்.

# வாழை மரம்



வாழை மரமாம்; வாழை மரம்
வளர்ந்து செழிக்கும் வாழை மரம்!
பச்சைப் பசிய வாழை மரம்
பண்பு கொண்ட வாழை மரம்.
இன்பமுடன் உண்ணவே
இலைகள் தரும் வாழைமரம்...
புன்னகையுடன் உண்ணவே
பூக்கள் தரும் வாழை மரம்...
கனிவுடன் உண்ணவே
காய்கள் தரும் வாழை மரம்...
பாசமுடன் உண்ணவே
பழங்கள் தரும் வாழை மரம்...
கண்டுகளித்து உண்ணவே
தண்டும் தரும் வாழை மரம்...
உண்டு நாமும் மகிழவே
உணவே மருந்தாய் வாழைமரம்.

த. ஆனந்தஜோதி,
முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு.

# வானவில்



வானில் தோன்றும் வில் பாரு
வான வில்லாம் அதன் பேரு.
மழைக் காலத்தில் வந்திடுமாம்!
சூரியன் மழைத்துளியில் பட்டு
நிறப்பிரிகையாலே தோன்றிடுமாம்!
ஏழு வண்ணம் காட்டிடுமாம்
எழிலாய்க் காட்சித் தந்திடுமாம்!
கண்டு நாமும் களித்திடுவோம்
கவலை மறந்து நீயும் வா...



த. விஜயலட்சுமி,
ஆய்வியல் நிறைஞர், (தமிழ்).

# வேப்ப மரம்



குழந்தைகளே! வாருங்கள்...
குதித்து ஓடி வாருங்கள்.
வேப்ப மரம் பார்க்கவே
வேகமாக வாருங்கள்.

இந்தியாவில் இருக்குதாம்
இலங்கை பர்மாவிலும் வளருதாம்
இயற்கைப் பூச்சிக் கொல்லியாம்
இனிதுடனே பாருங்கள்!

(குழந்தை...)

பங்குனியில் பூக்குமாம்
வைகாசியில் காய்க்குமாம்
பல்லாண்டு வாழுமாம்
பலன்கள் பல பொழியுமாம்!.



கரு வேம்பு என்றொன்றாம்!
நில வேம்பு என்றொன்றாம்!
மலை வேம்பும் இருக்குதாம்!
சர்க்கரை வேம்பும் இருக்குதாம்!

(குழந்தை...)

மேய்ந்து திரிந்த ஆடு மாட்டைக்
காய்ச்சல் கசக்கிப் போட்டுச்சாம் - பாட்டி
வேப்பம் பட்டைப் புகையைக் காட்ட
வெப்பம் தணிஞ்சு திரிஞ்சுச்சாம்!

சிறுநீரைப் பெருக்குமாம்...
வயிற்றுப் புண்ணை ஆற்றுமாம்...
பித்தம் காமாலை போக்குமாம்...
பயனும் பலவே நிறைந்ததாம்!



(குழந்தை...)

ப. கணேஷ்வரி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்).

# புகை வண்டி

குழந்தைகளே! வாருங்கள்
கூட்டமாக வாருங்கள்...
புகைவண்டியைப் பாருங்கள்...
பூரித்து மகிழுங்கள்!
நெடுந்தூரப் பயணத்திற்கும்
நிலைத்து நிற்பேன் பாருங்கள்...
தண்டவாளம் ஏறித்
தழுவிச் செல்வேன் பாருங்கள்...
தடக்கு தடக்கு ஒலியாலே
தாளமிடுவேன் கேளுங்கள்...
நீராவியில் ஓடும் என்னை
நீண்ட நேரம் பாருங்கள்...
நிலக்கரியில் ஓடும் என்னை
நினைத்து நினைத்துப் பாருங்கள்...
மின்சாரத்தில் ஓடும் என்னை
மிரண்டு மிரண்டு பாருங்கள்...
ஓடி ஓடி வாருங்கள்!
ஓயாமல் பாருங்கள்!
விரைந்து விரைந்து வாருங்கள்...
விருப்பமுடன் பாருங்கள்!





ச. சுதா,
ஆய்வியல் நிறைஞர் (தமிழ்).


நன்றி